# நடப்பு நிகழ்வுகள் – மே 24, 2019

## தேசிய செய்திகள்:

### தேசிய புற்று நோய் கழகத்துடன் NHA ஒப்பந்தம்

- புற்றுநோயில் இருந்து காப்பதற்காக புற்றுநோய் நோயாளிகளின் கவனிப்பில் சீரான தரத்தை கொண்டுவரும் நோக்கத்தோடு தேசிய சுகாதார ஆணையத்துடன் தேசிய புற்று நோய் கழகம் இணைந்து Ayushman Bharat-Pradhan Mantri Jan Arogya Yojana (AB-PMJAY) திட்டத்தின் கீழ் ஒப்பந்தம் செய்துள்ளது.

## தமிழ்நாடு:

### தமிழ்நாடு பெட்ரோ லாபம் 14% அதிகரிப்பு

- தமிழ்நாடு பெட்ரோ பொருட்கள் லிமிடெட், (டிபிஎல்) அதன் முழுமையான நிகர இலாபத்தில் ரூபாய் 14.36% வளர்ச்சி கண்டுள்ளது. மார்ச் 31 ம் தேதியுடன் முடிவடைந்த 2019 காலாண்டில் முந்தைய ஆண்டைக் காட்டிலும் 14.36% அதிகமாக 11.39 கோடி ரூபாய் லாபம் பதிவு செய்யப்பட்டுள்ளது. கடந்த வருடம் தமிழ்நாடு பெட்ரோ பொருட்களின் லாபம் 9.96 கோடி ரூபாயாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது

## மாநாடு:

### சத்தம், அதிர்வு மற்றும் கடுமையின் மீதான சர்வதேச கருத்தரங்கிற்கு ICAT ஏற்பாடு

- ICAT மானேசரில் சத்தம், அதிர்வு மற்றும் கடுமையின் மீதான சர்வதேச கருத்தரங்கு (iNVH) மற்றும் ஒர்க்ஷாப்பை சர்வதேச தானியங்கி தொழில்நுட்ப மையம் (ICAT) 2019 மே 23 மற்றும் 24ம் தேதி ஏற்பாடு செய்துள்ளது.

## விண்வெளி அறிவியல்:

**எலோன் மஸ்கின் Starlink இணைய சேவைக்கு SpaceX முதல் செயற்கைக்கோள்களை அனுப்பியுள்ளது**

- ஹை டெக் தொழில் முனைவர் எலோன் மஸ்கின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம், தனது புதிய Starlink இணைய சேவைக்கு ஐந்து டஜன் சிறிய செயற்கைக்கோள்களை சுமந்து செல்ல ஃபால்கோன் 9 விண்வெளிக்கலன் ஒன்றை அனுப்பியுள்ளது.

## அறிவியல் கண்டுபிடிப்பு:

**வெளுக்கும் பவளப்பாறை மண்டபம் , கீழக்கரை, பாக்கு நீரிணை அருகே கண்டுபிடிப்பு**

- புவியியல் அமைச்சகம் கீழ் உள்ள கரையோர ஆராய்ச்சிக்கான தேசிய மையத்தின் ஒரு புல ஆராய்ச்சி நிலையம் மன்னார் கணவாய் வளைகுடாவில் உள்ளது அங்கு வெளுக்கும் பவளப்பாறைகளை கீழக்கரை, பாக்கு நீரிணை அருகே ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

## அறிவியல் & தொழில்நுட்பம்:

**காந்தவிசை ரயில் முன்மாதிரியை சீனா அறிமுகப்படுத்தியுள்ளது**

- காந்தவிசையில் இயங்கும் புதிய அதிவேக ரயிலின் முன்மாதிரியை சீனா அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த ரயில் மணிக்கு 600 கிமீ வேகத்தில் செல்ல கூடியதாய் வடிவமைக்கப்படவுள்ளது.

## சர்வதேச நிகழ்வுகள்:

### தெரேசா மே ஜூன் 7-ம் தேதி பதவி விலக முடிவு

- கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து வருகிற ஜூன் 7-ம் தேதி பதவி விலகுவதாக அறிவித்துள்ளார் தெரேசா மே. அதன் பின்னர் அடுத்த ஒரு வாரத்திலேயே புதிய தலைவருக்கான தேர்தல் பணி தொடங்கிவிடும் என அறிவித்துள்ளார்.

## விளையாட்டு செய்திகள்:

### இந்திய ஓபன் குத்துச்சண்டை

- இந்தோரில் நடந்த இந்திய ஓபன் குத்துச்சண்டை போட்டியில் மகளிர் பிரிவில், சக நாட்டு வீராங்கனை நிகத் சாரின் 4-1 என்ற புள்ளி கணக்கில் வீழ்த்தி இறுதி சுற்றுக்கு முன்னேறினார் 6 முறை உலக சாம்பியன் ஆன இந்திய வீராங்கனை மேரி கோம்

### FIFA 2022 உலகக் கோப்பை போட்டியில் 48 நாடுகள் பங்கேற்கும் முடிவை கைவிட்டது

- கத்தார் நகரில் நடைபெறவுள்ள 2022 உலகக் கோப்பை போட்டியில் முன்மொழியப்பட்ட விரிவாக்கத்தை கைவிட FIFA முடிவு. உலகக் கால்பந்து அணியின் தலைவர் ஜியானி இன்பான்டினோ ஆவர்.

நடப்பு நிகழ்வுகள் 2018 PDF Download

பொது அறிவு பாடக்குறிப்புகள் PDF Download

பாடம் வாரியான குறிப்புகள் PDF Download

Whatsapp குருபில் சேர - கிளிக் செய்யவும்

Telegram Channel ல் சேர - கிளிக் செய்யவும்